**In the Court of the District Munsif, Devakottai**

**O.S. No. 120 / 2012**

**---**

Deposition of plaintiff/defendant witness (PW3/DW) solemnly affirmed and sworn by Thiru. NaveenKumar, Junior Assistant of this Court in accordance with the provisions of this act 1872 on : 07.07.2022

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | செல்வநாதன் | Father's Name | : | வேதமாணிக்கம் |
| Taluk | : | தேவகோட்டை | Village | : | முள்ளிக்குண்டு |
| Religion | : | கிறிஸ்தவர் | Age | : | 55 |
| Caste | : | | | | |

**குறுக்குவிசாரணை :**

தாவா சொத்து ஆரம்பத்தில் யாருக்குப் பாத்தியப்பட்டது என்றால் தென்னீர்வயல் கிராமத்தை சேர்ந்த சுப்புராமன் என்பவருக்கு கிரையப்பாத்தியப்பட்ட சொத்தாகும். சுப்புராமனின் தகப்பனார் பெயர் பெரியய்யா. பெரியய்யா மகன் சுப்புராமன் பெயரில் தாவா சொத்து உள்ளது என்பதற்கு ஏதாவது ஆவணங்கள் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன், தாக்கல் செய்துள்ளேன். என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் கிரையம் வாங்கிய பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேன். வருவாய்த்துறை ஆவணம் ஏதேனும் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். பெரியய்யா மகன் சுப்புராமன் என்று இருப்பதற்கு, வருவாய்த்துறை ஆவணம் ஏதேனும் பார்த்துள்ளேனா என்றால் வரிரசீது மற்றும் SLR-ஐ தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் பெரியய்யா மகன் சுப்புராமன் என்பதற்கு எந்தவிதமான வரிரசீதுகளும் தாக்கல் செய்யவில்லை என்றால் SLR தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்திற்காக SLR எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.29 ஆவணத்தில் சர்வே எண்.26/8, மைனர்கள் 1. பூமிநாதன், 2. சொர்ணம், மற்றும் காப்பாளர் தாயார் சிட்டாள் ஆகியோர்கள் பெயர்கள் உள்ளதா என்றால் உள்ளது. வா.சா.ஆ.29 ஆவணத்தில் 2வது தாளில் பெரியய்யா அம்பலம் மகன் சுப்புராமன் அம்பலம் என்று குறிப்பிட்டு சுழிக்கப்பட்டு 1.பூமிநாதன், 2. சொர்ணம், காப்பாளர் தாயார் சிட்டாள் க-பெ. சுப்புராமன் அம்பலம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் சர்வே எண். 26-8 காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், அதை எழுதி கொடுத்த நபர் தென்னீர்வயல் கிராமத்தை சேர்ந்த பெரியய்யா அம்பலம் மகன் சுப்புராமன் என்று கண்டுள்ளது, அவருடைய மகன்களான 8வயதுள்ள

A DHARANIDHARAN

Deposition
Digitally signed by A DHARANIDHARAN
Location: District Munsif Court Devakottai
Date: 2022.07.07 17:28:00 +0530

சுப்பிரமணியன்-1, 5 வயதுள்ள இராமநாதன்-2 என்று கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.2 ஆவணத்தில் கண்டுள்ள நபர்களும், வா.சா.ஆ.29 ஆவணத்தில் கண்டுள்ள நபர்களும் வெவ்வேறான நபர்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் கண்டுள்ள நபர்களின் பெயரில் வருவாய்த்துறை ஆவணங்களில், ஏதாவது ஒரு ஆவணத்தில் பதிவுகள் உள்ளதா என்றால் எனக்குத்தெரியாது. சர்வே எண். 26-8 சொத்து, வா.சா.ஆ.2 ஆவணத்தில் எழுதிக்கொடுத்த நபர்களுக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு வருவாய்த்துறை ஆவணங்கள் எதுவும் நான் பார்க்கவில்லை. வா.சா.ஆ.2 ஆவணத்தில் எனக்குப் பூர்வீக பாத்தியப்பட்டது என்று காணப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பூர்வீக பாத்தியம் என்பதற்கு பட்டா எதுவும் நான் பார்க்கவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் எழுதிகொடுத்த நபரும், வா.சா.ஆ.2 ஆவணத்தில் எழுதி கொடுத்த நபரும் ஒரே நபர் ஆவார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1-ஐ எனது தாத்தா அருள்பிள்ளை கிரையம் பெற்றுள்ளார், மேற்படி கிரையப்பத்திரத்தை எழுதி கொடுத்த நபர் அவரது தகப்பனார் பெரியய்யா அம்பலத்தார், 04.07.1927ல் இராமையா என்பவரிடம் கிரையம் பெற்றதாக வா.சா.ஆ.1ல் குறிப்பிட்டுள்ளார். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ளபடி தாவா சொத்தான சர்வே எண். 26-8, பெரியய்யா அம்பலத்திற்கு கிரையப்பத்திரம் மூலம் பாத்தியப்பட்டுள்ளது என்று காட்டியுள்ளது சரியா அல்லது வா.சா.ஆ.2ன் படி பூர்வீக பாத்திய அனுபவமானது என்று கண்டுள்ளது சரியா என்றால் கிரையப்பாத்தியம் என்று கண்டுள்ளது தான் சரி, வா.சா.ஆ.2ல் கண்டது போல் பூர்வீக பாத்தியம் என்று தவறா என்று கண்டுள்ளது எனக்குதெரியாது. 1927ல் பெரியய்யா அம்பலம் கிரையம் பெற்ற கிரையப்பத்திரத்தை தாக்கல் செய்துள்ளோம், மேற்படி கிரையப்பத்திரம் வா.சா.ஆ.5 ஆகும். வா.சா.ஆ.5 ஆவணத்தில் தாவா சொத்தின் சர்வே எண். 26-8 என்று கண்டுள்ளதா என்றால் இருக்கிறதா, இல்லையா என்று தெரியவில்லை. வா.சா.ஆ.5 கிரையப்பத்திரத்தில் சர்வே எண். 28-6 காணப்பட்டுள்ளது. வா.சா.ஆ.5ன் படி சர்வே எண். 28-6 ஐத்தான் கிரையம் வாங்கினார் என்று தவறாக வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்களில் தாவா சொத்தான சர்வே எண். 26-8 என்று தவறாக கண்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அதனால் எனது தாத்தா கிரையம் பெற்றது சர்வே எண். 28-6ஐத்தான், தாவா சொத்தை கிரையம் பெறவில்லை என்றும் அது பிரதிவாதிகளுக்கும் அவர்களது முன்னோர்களுக்கும் பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை: வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி மறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

A
DHARANIDHARAN

Deposition
Digitally signed by A DHARANIDHARAN
Location: District Munsif Court Devakottai
Date: 2022.07.07 17:28:08 +0530